**பேராதனை பல்கலைக்கழகம் - 2021**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுகளுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர, நிறுவனத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அறிக்கை முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக் கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது பல்கலைக்கழகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் பல்கலைக்கழகத்தை தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வு அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.
இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்படுகின்றன. தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக குறிப்பிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் இல்லையாயினும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாடு தொடர்பான தெளிவொன்றை பெற்றுக்கொண்டேன்.
- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தால் தொடர்புடைய வெளிப்படுத்தல்களும் மதிப்பீடு செய்யப்பட்டன.
- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக பல்கலைக்கழகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமானதாகவும் உட்சேர்க்கப்பட்டுள்ளது என்றும் மற்றும் வெளிப்படுத்தல்கள் அடங்கிய நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த முன்வைப்பும் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்
- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பல்கலைக்கழகத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிலையம் செயற்படுகின்றதா எனவும்
- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்
- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| குறித்த நியமங்களுடன் தொடர்பான இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 7 இன் 47 ஆம் பந்தியின் பிரகாரம் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரண விடயங்களில் நியாயமான பெறுமதி மாற்றங்கள் ஒவ்வொரு மூன்று ஆண்டுகளில் அல்லது ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை மீள் மதிப்பீடு செய்து நிதிக் கூற்றுக்களில் சீராக்க வேண்டிய போதிலும் பல்கலைக்கழகத்திற்குச் சொந்தமான 26 காணித் துண்டுகள் ரூபா 11,989,600,000 இற்கு 2015 ஆம் ஆண்டின் போது மீள் மதிப்பீடு செய்த பின்னர் 06 ஆண்டுகள் கடந்த போதிலும் அவற்றை மீள்மதிப்பீடு செய்து நிதிக் கூற்றுக்களில் சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டில் ஏற்பட்ட கொவிட் தொற்று காரணமாக மீள் மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க முடியாமல் போனதாகவும் அதற்காக வேண்டுகோள் மதிப்பீட்டு திணைக்களத்திற்கு தற்போது அனுப்பிவைக்கப்பட்டுள்ள தாகவும் குறித்த மதிப்பீட்டு அறிக்கை 2022 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகளில் சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும். | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 65 ஆம் பந்தியின் பிரகாரம் நடைமுறையல்லாத சொத்துக்களுக்கான பயன்படு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாததன் காரணமாக 2021 | அனைத்து வாகனங்களும் தற்போது மீள்மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதாகவும் ஏனைய நிலையான சொத்துக்கள் மீள்மதிப்பீடு | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | திசெம்பர் 31 ஆந் திகதியில் ரூபா 1,603,332,203 ஆன நிலையான சொத்துக்கள் முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டுள்ள போதிலும், தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்ட வாறு காணப்பட்டன. அதன் பிரகாரம் மதிப்பீட்டு வழுவினை இலங்கை பொதுத்தறை கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் திருத்தியமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | செய்யப்பட்டு 2022 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் | |
| (இ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 08 இன் 38 ஆம் பந்தியின் பிரகாரம் முதலில் நிகழத்தக்க பொறுப்பாக கருதப்பட்ட விடயங்களுக்காக பொருளாதார நலன்கள் அல்லது சேவை உட்கட்டமைப்புக்கள் வெளியே பாய்ச்சலாக வரும் நிலைமையில் நிகழ்வுகள் வேறுபாடு இடம்பெற்ற காலப் பகுதியில் நிதிக் கூற்றுக்களில் நிதிஏற்பாடு இனங்காணப்பட வேண்டிய போதிலும் 2021 நவம்பர் 11 ஆந் திகதி கிடைத்திருந்த உயர் நீதிமன்ற தீர்ப்பின் பிரகாரம் மீண்டும் சேவையில் அமர்த்தப்பட்டிருந்த பல்கலைக்கழக பிரதான பாதுகாப்பு உத்தியோகத்தருக்கு மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆந் திகதி வரை செலுத்த வேண்டிய ரூபா 5,569,573 ஆன நிலுவை சம்பளம் மற்றும் படிகளுக்காக நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இந்த உத்தியோகத்ரை மீண்டும் சேவையில் அமர்த்துவது தொடர்பான தீர்மானம் கணக்குப் பிரிவிற்கு 2022 சனவரி 10 ஆம் திகதி கிடைத்திருந்ததாகவும் அதன் பிரகாரம் நிலுவை சம்பளம் மற்றும் படிகள் 2022 பெப்ரவரி மாதம் சம்பளத்துடன் கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் 2021 ஆம் ஆண்டில் நிதி ஏற்பாட்டை மேற்கொள்ள போதியளவு தகவல்கள் நிதிப் பிரிவிற்கு கிடைக்கவில்லை என்பதாக | - மேற்படி - |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 ஆம் ஆண்டிலிருந்து 2020 ஆம் வரையான 03 ஆண்டுகளின் போது திருமண உற்சவங்களை நிழற்படம் எடுப்பதற்காக பல்கலைக்கழக வளவினை வழங்கியமைக்காக அறவிடப்பட்டிருந்த ரூபா 1,001,000 அந்தந்த ஆண்டின் வருமானமாக இனங்காணப்பட வேண்டிய போதிலும் அதற்குப் பதிலாக நானாவித ஆராய்ச்சிக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. மேலும் அந்த மொத்த வருமானம் மீளாய்வாண்டின் வருமானமாக இனங்காணப்பட்ட காரணத்தினால் மீளாய்வாண்டின் | நானாவித ஆராய்ச்சிக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்த இவ்வருமானம், வருமானச் செலவின கணக்கற்கு செலவு வைக்கப்பட வேண்டியமையால் 2021 ஆம் ஆண்டின் போது அம்முழுவருமானமும் வருமானக் கணக்கிற்கு மாற்றப்பட்டதாக | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 3 இன் 47 மற்றும் 51 ஆம் பந்திகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து இத்தவறு பின்னோக்கி திருத்தம் செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பற்றாக்குறை அதற்கு சமமான அளவில் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | 11 நிலையான வைப்புக்களில் மீளாய்வாண்டின் வட்டி வருமானம் ரூபா 4,394,436 ஆக இருந்த போதும் ரூபா 5,850,842 என கருதி கணக்கீடு செய்த காரணத்தினால் மீளாய்வாண்டின் பற்றாக்குறை மற்றும் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நடைமுறைச் சொத்துக்கள் ரூபா 1,456,406 ஆல் முறையே குறைத்தும் அதிகரித்தும் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2020 ஆம் ஆண்டின் போது குறைத்து கணக்கீடு செய்யப்பட்ட ரூபா 1,456,406 ஆன வட்டி வருமானம் மீளாய்வாண்டின் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளதாக | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 3 இன் 47 மற்றும் 51 ஆம் பந்திகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து இத்தவறு பின்னோக்கி திருத்தம் செய்யப்பட வேண்டும். |
| (இ) | பல்கலைக்கழகத்திற்குரிய கெட்டம்பே பிரதேசத்தில் அமைந்துள்ள 40 பேர்ச் அளவிலான காணி 1987 திசெம்பர் 31 ஆந் திகதி முதல் 2017 திசெம்பர் 30 ஆந் திகதி வரை 30 ஆண்டு குத்தகை அடிப்படையில் திவிநெகும திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்த துடன் அதற்காக 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய குத்தகை பணம் ரூபா 7,200,000 ஆன நிலுவை குத்தகைத் தொகை மற்றும் 2018 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு வரை 04 ஆண்டிற்குறிய பெற வேண்டிய வாடகை கணக்கிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | அறவிடப்பட வேண்டிய பணத்தை அறவிடுவதற்கும் மற்றும் எஞ்சிய கட்டிடத்தின் வெற்று உடமையை பல்கலைக்கழகத்திற்கு சொந்தமாக்கி கொள்ள கண்டி மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கொன்று தொடரப்பட்டு நடாத்திச் செல்வதாகவும் இந்நிலுவை வாடகையை திவிநெகும திணைக்களத்திடமிருந்து அறவிடுவதற்கும் தேவையான நடவடிக்கை களை எடுப்பதற்கு கங்கவட்ட கோரளை பிரதேச செயலாளருடன் காணப்பட்ட கூட்டத்தின் போது இனங்கப்பட்டதாக | - மேற்படி - |

## 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெற வேண்டிய தொகை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 09 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தி டமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 400,000 ஆன காப்புறுதி இழப்பீட்டுத் தொகையை பெற்றுக் கொள்வதற்காக குறித்த வாகனத்தினை நீதிமன்றத்திலிருந்து விடுவிப்பதற்கு 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் போதியளவு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கண்டி நீதிவான் நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டுள்ள வழக்கொன்றின் வழக்குப் பொருளாக இவ்வாகனத்தின் எஞ்சிய பெறுமதி பெயரிடப்பட்டுள்ளதால் இக்காப்புறுதி இழப்பீட்டினை பெற்றுக்கொள்ள முடியாதுள்ளதாக. | காப்புறுதி இழப்பீட்டுத் தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 03 வருடங்கள் முதல் 40 வருடங்கள் வரையிலான | தற்போது காணப்படும் நிலுவை மீதி ரூபா 1,163,889 எனவும் | அறவிடுவதற்குள்ள பணத்தை அறவிடுவதற்கும் |

| | | | |
|---|---|---|---|
| | பல்கலைக்கழகத்தின் 09 பீடங்களின் மாணவர் களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 1,325,849 மண்டபக் கட்டணங்களையும் அபராதத்தையும் 2021 திசெம்பர் 31 வரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | தற்போது கல்வி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள விடுதி வசதிகளுக்கு உரித்தான மாணவர் களிடமிருந்து கிடைக்க வேண்டிய விடுதிக் கட்டணங்கள் மற்றும் தண்டப்பணம் என்பவற்றை அறவிடுவதற்காக குறித்த மாணவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் கொடுப்பனவை பூர்த்தி செய்துள்ள மாணவர்களுக்கு மாத்திரம் கல்விச்சான்றிதழ் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் | அறவிட முடியாதா பணத்தை பதிவழிப்பதற்கும் நடவடிக்ரைக எடுத்தல் வேண்டும் எதிர்காலத்தில் இவ்வாறான நிலைமையொன்று ஏற்படாத வகையில் முறையான நடைமுறையொன்று பின்னபற்றப்பட வேண்டும். |
| (இ) | பிணைகள் மற்றும் ஒப்பந்தங்களை மீறிய 111 விரிவுரையாளர்கள் மற்றும் பிற உத்தியோகத்தர்களிடமிருந்து 2021 திசெம்பர் 31 வரை அறவிடப்பட வேண்டிய ரூபா 131,871,454 தொகையை அறவிடுவதற்கு 02 ஆண்டுகள் முதல் 51 ஆண்டுக காலமாக முறையான நடைமுறைகள் எதுவும் பின்பற்றப்படவில்லை. | 64 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய பழமையான மீதிகளை பதிவழிப்பதற்கும் 11 பேரிடமிருந்து பல்கலைக்கழகம் சேமலாப நிதியத்திலிருந்து அறவிடுவதற்கும், 36 பேருக்கு வழக்கு தொடருவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக | பணத்தை அறவிடுவதற்கும் எதிர்காலத்தில் இவ்வாறான நிலைமையொன்று ஏற்படாமல் இருப்பதற்கு நடைமுறைகள் பின்பற்றப்படவேண்டும் |
| (ஈ) | உயர் கல்விக்கான தேசிய நிலையத்தால் பட்டப்பின் படிப்பு கற்கைக்காக மானியமொன்றாக விரிவுரையாளர் ஒருவருக்கு கிடைத்திருந்த ரூபா 1,602,630 தொகையை அந்த விரிவுரையாளரிடமிருந்து பிணை முறி மீறல் மற்றும் உடன்படிக்கை மீறிய ஒருவராக இருந்த காரணத்தினால் அவரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய போதிலும் ஓராண்டு காலம் கடந்திருந்த போதும் அப்பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | இத்தொகையை உள்ளடக்கப்பட்டு பிணைமுறி பெறுமதியை அறவிடுவதற்காக கண்டி மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கொன்று தொடரப்பட்டுள்ளதாக | நீதிமன்ற தீர்ப்பின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | 2008 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் பல்வேறு காரணங்களால் சம்பளம் வழங்குவது இடைநிறுத்தப்பட்டிருந்த 12 உத்தியோகத்தர் களிடமிருந்து பெற வேண்டிய ரூபா 744,607 ஆன இடர் கடனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | அவர்களின் சேமலாப நிதியத்தில் போதியளவு மீதியொன்று இருப்பதால் அதனை விடுவிக்கும் போது எஞ்சிய தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | உத்தேசிக்கப்பட்ட பிரகாரம் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | 2021 திசெம்பர் 31 ஆம் திகதி வரை ஓய்வுபெற்ற, சேவையில் இருந்து விலகிய, இடமாற்றம் செய்யப்பட்ட 17 உத்தியோகத்தர்களிடமிருந்து 12 மாதங்கள் முதல் 105 மாதங்கள் வரை நிலுவையாக இருந்த ரூபா 1,592,007 ஆன கடன் மீதிகளை வசூலிக்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. | இடமாற்றம் சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து கடன் மீதிகளை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் சேவையை விட்டுச் சென்ற மற்றும் சேவை இடைநிறுத்தம் செய்யப்பட்டவர்களிடமிருந்து கடன் மீதிகளை அவர்களின் ஊழியர் சேமலாப நிதியத்திலிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | - மேற்படி - |

### 1.6.2 செலுத்த வேண்டிய தொகை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 06 ஒப்பந்தக்காரர்களுக்கு செலுத்த வேண்டிய ரூபா 3,162,267 தொகையை மீளாய்வாண்டு இறுதி வரை கொடுத்து தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்து சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | செலுத்த வேண்டிய பணத்தை முறையாக தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 50 ஒப்பந்தங்களுக்குரிய பிடித்துவைக்கப்பட்ட ரூபா 84,493,836 தொகை 01 ஆண்டு முதல் 05 ஆண்டுகள் வரையான காலம் கடந்திருந்த போதும் மீளாய்வாண்டு இறுதி வரை விடுவிக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்து சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | நிர்ணயிக்கப்பட்ட காலம் கடந்த பிடிகாசினை முறையாக விடுவிக்கப்பட வேண்டும். |

### 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை | | | |
| (i) XIX ஆம் அத்தியாயத்தின் 5 ஆம் பந்தி | தாபன விதிக் கோவையில் குறிப்பிடப்பட்ட அளவினை விட குறைந்த வாடகை அறவிட்ட காரணத்தினால் மீளாய்வாண்டிற்காக மாத்திரம் 319 வீடுகளுக்காக ரூபா 28,133,046 தொகை குறைத்து அறவிடப்பட்டிருந்தது. | இது தொடர்பாக விசேட கவனமொன்று செலுத்தி வீடுகளைத் திருத்தங்கள் மற்றும் பராமரிப்பு செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதால் வீட்டு வாடகை அறவீட்டு திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாகவும் அதன் பிரகாரம் நிலையான வாடகை பெறுமதியில் | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவையின் ஏற்பாடுகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்க வீட்டு வாடகை அறவிடப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | வருடாந்த வாடகையை அதிகரிப்பதற்காக பேரவையின் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதாகவும் குறித்த வாடகை பெறுமானத்தை அறிவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் | |
| | (ii) XXXIII ஆம் அத்தியாயத்தின் 5.1 மற்றும் 5.2 ஆம் பந்திகள் | சட்டமா அதிபரின் சட்ட உதவியை பெற்று மற்றும் அவரிடமிருந்து கருத்துக்களை விசாரிக்காமலும் பெறுகை செயற்பாடு பின்பற்றப்படாமலும் தெரிவுசெய்யப்பட்டிருந்த சட்டத்தரணியிடமிருந்து சேவைகள் பெற்றுக் கொள்ளப்பட்டு பல்கலைக்கழகத்திற்கு எதிராக தொடுக்கப்பட்ட வழக்கொன்று தொடர்பாக ரூபா 750,000 ஆன வழக்கு கட்டணங்கள் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தன. | வழக்கின் தன்மையின் பிரகாரம் விசேடத்துவ அறிவுடன்கூடிய சட்டத்தரணியொருவர் பேரவையின் அங்கீகாரத்தின் பேரில் தெரிவு செய்யப்பட்டதாக | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவையின் நியதிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | அரசின் பெறுகை வழிகாட்டல் கோவை | | | |
| | (i) 1.2.1 வழிகாட்டல் | பெறுகை செயற்பாடு மூலம் உறுதிப்படுத்த வேண்டிய அநேகமான விடயங்கள் தவிர்க்கப்பட்டு அவற்றுக்கு இணங்காத வகையில் தெரிவு செய்யப்பட்டிருந்த வழங்குனரிடமிருந்து ரூபா 3,649,589 செலவிட்டு 30 கைவிரலடையால இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. | பெறுகை செயற்பாடு இணங்காத வகையில் 30 கைவிரலடையால இயந்திரங்கள் கொள்வனவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தேசிய பெறுகை ஆணைக்குழுவினாலும் அறிவித்துள்ளதாகவும் இது தொடர்பாக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் பரிந்துரைகளுக்கு இணங்க எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்படுவதாகவும் | பெறுகை செயற்பாடு இணங்காத வகையில் செயற்பட்ட பொறுப்பான உத்தியோகத்தர்கள் தொடர்பாக முறையான பரிசோதனையொன்று மேற்கொண்டு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| | (ii) 5.4.4 (i) வழி காட்டல் | ஒப்பந்த பெறுமதியில் அதிகபட்சமாக 20 சதவீதத்திற்கு உட்பட்டு வேலையைத் | தற்போது ரூபா 108,727,596 ஆன வேலை தொடக்க முற்பணம் | - மேற்படி - |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தொடங்குவதற்கான முற்பணம் செலுத்த வேண்டிய போதிலும் மருத்துவ பீடத்தின் குறைநிரப்பு சிகிச்சை கட்டிட நிர்மாணத்தின் வேலையின் பெறுமதியான ரூபா 374,803,764 தொகைக்கு 29 சதவீதத்திற்கு சமமான ரூபா 108,727,596 தொகை வேலை தொடக்க முற்பணமாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | அறவிடப்பட்டு பூர்த்தி செய்துள்ளதாக | |
| (iii) | 7.7.1(அ) ஆம் வழிகாட்டி | கைவிரலடையால இயந்திரங்களுக்கும் அதற்கு தேவையான மென்பொருட்களுக்காக வேறாக கேள்வி கோரப்பட்டிருந்த போதும் இரண்டு கேள்விகளையும் சேர்த்து மதிப்பீடு செய்த காரணத்தினால் இயந்திரங்களுக்காக மாத்திரம் கேள்விகளை முன்வைத்திருந்த 04 கேள்விதாரர்கள் மதிப்பீடு செய்யப்படாமல் அகற்றப்பட்டிருந்தனர். அதனால் அவர்களுக்கு அது பாதகமாக இருந்தது, இரண்டு வழங்குனர்களால் மென்பொருட்களுக்கான தீர்வுகள் தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த விதந்துரைகள் சமமாக காணப்பட்டதாக அவதானிக்கப்பட்ட போதும் குறைந்த கேள்விதாரரின் மென்பொருள் தீர்வு பல்கலைக்கழகத்தின் எதிர்பார்க்கப்பட்ட நிலைமைகளுடன் பொருந்தவில்லையென குறிப்பிட்டு தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழவினால் அந்த கேள்விதாரர் நிராகரிக்கப்பட்டிருந்தார். கூடிய கேள்வியை சமர்ப்பித்த கேள்விதாரர் தெரிவு செய்யப்பட்டு ரூபா 3,649,587 செலவிட்டு 30 கைவிரலடையால இயந்திரங்களும் அதற்குத் தேவையான மென்பொருட்களும் | இச்செயற்பாட்டின் பொறியயிலாளர் மதிப்பீடு வெட் இன்றி ரூபா 39,067,600 எனவும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் கணித தவறுகளை சரி செய்து ரூபா 36,232,344 ஆன பெறுமதிக்கு ஒப்பந்தம் அளிப்புச் செய்யப்பட்டிருந்ததாக வும் கணித ரீதியான தககவல்கள் சரிசெய்யப்பட்டதன் பின்னர் வழங்கப்பட்ட ஒப்பந்தப் பெறுமதி பொறியியாளர் மதிப்பீட்டினை விட குறைவாக இருப்பதால் நிதிசார் நட்டமொன்று இடம்பெறவில்லை என்பதாக | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | கொள்வனவு செய்யப்பட்டமையால் இடம்பெற்ற நட்டம் ரூபா 529,587 ஆக இருந்தது. | | |
| 7.9.2 ஆம் வழிகாட்டல் | தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் கணித தவறுக்காக கேள்வி நன்றாக விசாரிக்கப்படாமல் நடவடிக்கை எடுத்தமையால் கலை பீடத்தின் 04 கட்டிடங்களுக்கு மின்தூக்கி பொருத்தும் ஒப்பந்தம் ரூபா 36,329,143 இற்கு வழங்குவதற்கு நேர்ந்திருந்ததுடன் அதன் காரணமாக பல்கலைக்கழகத்திற்கு ரூபா 2,079,143 நட்டம் அடைந்தது. | 2020 யூன் 15 ஆந் திகதிய அளிப்புக் கடிதத்தின் 02 ஆம் பந்தி மற்றும் ஒப்பந்தக்காரரின் 2020 யூன் 25 ஆந் திகதிய கடிதத்தை அடிப்படையாக கொண்டு தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் மீண்டும் கேள்விதாரரின் விலை முன்மொழிவு பரீட்சிக்கப்பட்டு தொழில்நுட்ப மதிப்பீட்டுக்குழு பரிந்துரை வழங்கப்பட்டதாக | - மேற்படி - |

## 2. நிதி மீளாய்வு

### நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக நிதி விளைவுகள் ரூபா 218,226,526 ஆன பற்றாக்குறையானதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டில் பற்றாக்குறை ரூபா 915,187,815 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 696,961,289 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு மஹபொல மானியங்கள், ஆராய்ச்சி மானியங்கள் மற்றும் அரசின் மானியங்கள் ரூபா 21,386,282 அதிகரித்தமையும் தொழிற்பாட்டுச் செலவினம் ரூபா 634,201,155 ஆல் குறைவடைந்தமை பிரதான காரணங்களாக இருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முன்னைய ஆண்டின் போது 159 சிகிச்சை காப்பகங்கள் கொள்வனவிற்காக ரூபா 2,911,774 தொகை வழங்குனருக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. எனினும் வழங்குவதற்கு இணங்கியிருந்த வியாபாரப் பெயர் இல்லாத காப்பகங்கள் வழங்கப்பட்டிருந்தமை மற்றும் 159 காப்பகங்களுக்கு பதிலாக 80 காப்பகங்கள் மாத்திரம் | பொருட்களை பொறுப்பேற்கும் குழுவினால் 159 காப்பகங்கள் வழங்கப்பட்டிருந்தன என்ற சான்றிதழை அடிப்படையாக கொண்டு பொருட்கள் இருப்பு பதிவேட்டிற்கு உட்படுத்தப்பட்டிருந்ததாகவும் குறித்த காப்பகம் உரிய தரத்திலும் உரிய அளவிலும் இருப்பதாக | பொருட்களை பொறுப்பேற்கும் குழுவின் செயற்பாடுகள் தொடர்பாக முறையான பரிசோதனையொன்றை மேற்கொண்டு பணம் கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டமை தொடர்பாக பொறுப்பான உத்தியோகத்தருக்கு |

| | | | |
|---|---|---|---|
| | வழங்கப்பட்டிருந்தமை என்பவற்றைக் கருத்திற் கொள்ளாமல் பணம் செலுத்தியிருந்த காரணத்தினால் ரூபா 1,446,730 தொகை வழங்குனருக்கு மேலதிகமாக வழங்கப்பட்டிருந்தது. | உறுதிப்படுத்தியிருந்ததால் கொடுப்பனவு செய்யப்பட்டதாகவும் பின்னர் 80 காப்பகங்கள் மாத்திரம் கிடைத்துள்ளதாகவும் குறித்த மாதிரி மற்றும் நிர்ணயிக்கப்பட்ட விதந்துரைகளின் பிரகாரம் குறித்த மாதிரி மற்றும் உத்தரவாதக்காலம் வழங்கப்படாதிருந்தமை வெளிப்படுத்தப்பட்டமையால் எஞ்சிய 79 காப்பகங்களை வழங்குமாறு அரச வியாபார வர்த்தக கூட்டுத்தாபனத்திற்கு எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டுள்ளதாக | எதிராக தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் ஆராய்ச்சி நடவடிக்கைகள் முடிக்கப்படாததால் 23 ஆராய்ச்சி செயற்திட்டங்கள் இரத்து செய்யப்பட்டன, ஆனால் அவற்றுக்காக செலுத்தப்பட்ட ரூபா 5,254,280 தொகை 2021 திசெம்பர் 31 வரையிலும் திரும்பப் பெறப்படவில்லை. மேலும் இதுபோன்ற 15 ஆராய்ச்சி திட்டங்களுக்கு செலுத்தப்பட்ட ரூபா 8,669,237 தொகையை பல்கலைக்கழக ஆராய்ச்சி நிதியத்திற்கு செலவு வைக்குமாறு பேரவை மற்றும் ஆராய்ச்சிக் குழுவினால் பரிந்துரைக்கப்பட்டிருந்த போதும் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அப்பணம் மீளப் பெற்றுக்கொள்ளப்படவில்லை. | இரத்துச் செய்யப்பட்ட ஆராய்ச்சிகள் தொடர்பாக ஆராய்ச்சிக்குழு தீர்மானம் குறித்த ஆராய்ச்சியாளருக்கு அறிவிக்கும் போது ஏதேனும் தொகையொன்று அறவிடப்படும் என குறிப்பிடப்பட்டிருந்ததாகவும் அது தொடர்பாக தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்காக நவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் ஆராய்ச்சி மானியத்தின் காலம் கடந்திருந்தால் மானியங்களை இரத்துச் செய்து பணத்தை அறவிடுவதற்கும், ஆராய்ச்சி மானியங்களின் காலம் முடிவடையாதிருந்தால் செயன் முன்னேற்ற அறிக்கை அல்லது இறுதி அறிக்கை அல்லது சமர்ப்பிக்குமாறு மானியங்களை பெறுனருக்கு அறிவித்துள்ளதாக | உத்தேச செயற்பாட்டை துரிதமாக்கி நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதியல் ஆராய்ச்சி செயற்பாடுகளை பூர்த்தி செய்வதற்கோ அல்லது பணத்தை அறவிடுவதற்கோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.2 முகாமைத்துவ வினைத்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வாகனங்கள் தொடர்பான மையப்படுத்தப்பட்ட நிர்வாக அமைப்பு நடைமுறைப் படுத்தப்படாததால், ஒவ்வொரு பீடம் மற்றும் பிற துணைப் பிரிவுகளின் தினசரி கல்வி மற்றும் செயல்பாட்டு நடவடிக்கைகளை | 2014 ஆம் ஆண்டிலிருந்து அரசின் தீர்மானத்தின் பிரகாரம் அரச நிறுவனங்களுக்காக வாகனங்கள் கொள்வனவை இடைநிறுத்துதல் மற்றும் செயற்பாட்டு குத்தகை அடிப்படையின் கீழ் வாகனங்களை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை | வாடகை அடிப்படையில் வாகனங்களை பெற்றுக் கொள்வதை குறைக்கும் வகையில் உயர் வினைத்திறமையுடன் வாகனங்கள் பயன்படுத்தப்பட |

| | | | |
|---|---|---|---|
| | பராமரிப்பதற்காக வாடகை அடிப்படையில் வெளி நிறுவனங்களிடமிருந்து வாகனங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்ததுடன் 2016 முதல் 2021 ஜூன் 30 வரையிலான காலப்பகுதியில் வாகனங்கள் வாடகையாக ரூபா 13,599,388 தொகையை அந்த நிறுவனங்களுக்கு செலுத்த நேர்ந்திருந்தது. | எடுத்ததன் பேரில் பல்கலைக்கழகத்திற்கு வாகனங்களை கொள்வனவு செய்வதற்கு முடியாதெனவும் 2016 ஆம் ஆண்டிலிருந்து 2021 ஆம் ஆண்டு வரை 06 ஆண்டுகளுக்காக வெளி நிறுவனங்களுக்காக பணம் செலுத்துவதற்கு நேர்ந்ததாகவும் எனினும் தற்போது பல்கலைக்கழகத்தின் பீடங்கள் மற்றும் பிரிவுகள் ஒன்றிணைக்கப்பட்டு வாகன முகாமைத்துவ தகவல் முறைமையொன்று நிறுவப்பட்டு இயன்றவரை வாகனங்களை போக்குவரத்து தேவைப்பாட்டிற்காக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக | வேண்டும். |
| (ஆ) | கால்நடை மருத்துவ பீடத்திற்கு அங்கீகரிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை பதிவு செய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடும் போது கடந்த 12 ஆண்டுகளில் 218 மாணவர்கள் குறைவாக பதிவு செய்யப்பட்டிருந்தனர். | அவதானிப்பினை ஏற்றுக்கொள்வதாகவும் ஒவ்வொரு ஆண்டிலும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் இந்த பீடத்திற்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் பட்டியல் பீடத்திற்கு அனுப்பிவைக்கப்பட்ட பின்னர் மேலும் வெற்றிடங்கள் இருக்குமானால் அவற்றை நிரப்புவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு பீடாதிபதி அவ்வப்போது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு அறிவித்துள்ளதாக | அங்கீகரிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கையை அனுமதிப்பதற்கு உயர் அளவில் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 125,000 யூரோக்களை மானியமாகப் பயன்படுத்த திட்டமிடப்பட்டு ஆரம்பிக்கப்பட்ட Supporting Evidence Based Intervention (SEBI) திட்டத்தின் முதல் கட்டத்தின் கீழ் 50,000 யூரோக்கள் அதாவது ரூபா 9,837,250 தொகை கால்நடை மருத்துவ பீடத்திற்கு 2019 செப்டம்பரில் கிடைத்திருந்தது. குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் செயற்திட்டத்தின் செயன் முன்னேற்றத்தை முதல் வருடத்தில் முன்வைக்காததால் ஆய்வு ஒப்பந்தம் முடிவுறுத்தப்பட்டிருந்ததுடன் இரண்டாம் கட்டத்தின் கீழ் கிடைக்க வேண்டிய 75,000 | வெளிநாட்டு மானியப் பணத்தைப் பெற்றுக் கொள்ளும் போது கடைப்பிடிக்கப்பட வேண்டிய நீண்ட நடைமுறை காரணமாக, திட்டத்தை முன்னெடுப்பதற்கு முன் பெறப்பட வேண்டிய அனுமதிகளைப் பெறுவதற்கு 06 மாதங்களுக்கும் மேற்பட்ட காலம் எடுப்பதன் காரணமாக செயற்திட்டத்தின் எதிர்பார்த்த இலக்குகளை உரிய செயற்திட்ட கால எல்லைக்குள் அடைந்து கொள்ள முடியவில்லை எனவும் செயற் திட்டத்தின் ஆரம்ப ஒப்பந்தத்தின் பெறவேண்டிய Euro 125,000 இல் சம்பந்தப்பட்ட நிதி நிறுவனம் வழங்கிய Euro 50,000 செலவிடப்பட்டு, அதற்கான ஆராய்ச்சி நடவடிக்கைகள் | ஆராய்ச்சி செயற்பாடுகளுக்காக கிடைக்கும் அனைத்து பணத்தையும் செயற்திறனாக பயன்படுத்தி அதிலிருந்து எதிர்பார்த்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | யூரோக்கள் மானியம் இழக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக, ஆராய்ச்சியிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை அடைய முடியவில்லை. | முடிக்கப்பட்டு, இறுதி அறிக்கைகள் மானிய நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதுடன் செயற் திட்ட நடவடிக்கைகள் நிறைவடைந்துள்ளதாக. | |
| (ஈ) | PATH AMR திட்டத்திற்காக பல்கலைக்கழகத்தின் கால்நடை மருத்துவ பீடத்திற்கு 2019 ஆம் ஆண்டில் ரூபா 2,443,650 கிடைக்கப் பெற்ற போதும், உடன்படிக்கைகளில் ஈடுபட இயலாமையால், அச்செயற்திட்டத்தை செயற்படுத்த முடியவில்லை. | அவதானிப்பினை ஏற்றுக் கொள்வதாகவும், இந்த செயற்திட்டத்தின் ஒரு நோக்கம் என்னவெனில் கால்நடை சுகாதாரத்திற்காக பேணிச் செல்லப்படும் ஆய்வு கூடத்திற்குத் தேவையான தொழில்நுட்ப மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் சிறப்பாக வழங்கி ஆய்வுகூட பணிகளை செயற்திறனாக மேற்கொள்ளல் மற்றும் அதன் ARM (ஆன்டிமைக்ரோபியல் ரெசிஸ்டன்ஸ்) நடவடிக்கைகள் தொடர்ந்து கண்காணிக்கப்படுவதாகவும் PATH நிறுவனத்தினால் ரூபா 2,443,650 தொகை பேராதனைப் பல்கலைக்கழகத்திற்கு இத்திட்டத்தின் அடிப்படைப் பணிகளை ஆரம்பிக்கவென குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் பல்கலைக்கழகம் மேற்படி செயற்பாடுகளை முன்னெடுத்த போதிலும் இதுவரையில் குறித்த ஆய்வு உடன்படிக்கைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்காத காரணத்தினால் இதுவரையான எந்த கொடுப்பனவுகளும் மேற்கொள்ளப்படவில்லையென்பதால் இதுவரை செலவிடப்பட்ட செலவினங்களை PATH நிறுவனத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் மீதமுள்ள பணத்தை PATH நிறுவனத்திற்கு திருப்பி அனுப்ப தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாகவும். | உரிய காலப்பகுதியில் ஆராய்ச்சி செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். |

**3.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தகுதிகான் காலப்பகுதிக்குரிய விரிவுரையாளர் ஒருவரை கட்டாய விடுமுறையில் அனுப்பியிருக்கையில் 2020 செப்தம்பர் மாதம் முதல் 2021 நவம்பர் மாதம் வரையான காலப்பகுதியில் பல்கலைக் கழகத்திற்கு | விவசாய பீடத்தின் கால்நடை விஞ்ஞானத் துறையில் பணிபுரிந்த விரிவுரையாளரால் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் ஒழுக்காற்று முரணான செயற்பாடு | சேவை வழங்கப்படாமல் செலுத்திய சம்பளம் மற்றும் படிகள் மீள அறவிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | எந்தவொரு சேவையையும் வழங்காமல் இருக்கையில் அக்காலப் பகுதிக்காக சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 2,602,720 தொகையும் அந்தக் காலப்பகுதியில் பல்கலைக்கழக கல்வி அல்லது ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்கு எந்தவொரு நேரடிப் பங்களிப்பையும் செய்யாத அந்த காலப்பகுதிக்காக அவருக்கு கல்வி மற்றும் ஆராய்ச்சி உதவித்தொகையாக ரூபா 1,383,283 வழங்கப்பட்டிருந்தது. | தொடர்பாக நடைபெற்ற புலனாய்வு செயற்பாடு களுக்குரிய 2022 ஜனவரி 29 ஆந் திகதி நடைபெற்ற பேரவை கூட்டத்தின் போது எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் இந்த விரிவுரையாளர் தொடர்பாக, முறையான ஒழுக்காற்று விசாரணை நடத்தப்படவில்லை எனவும் அவர் சமர்ப்பித்த கடிதத்தின் பிரகாரம் மன்னிப்புக் கோரலாக ஏற்றுக்கொள்ளவும் அதன் பிரகாரம் சேவைக்கு அறிக்கையிடுவதற்கு இடமளிக்கப்பட்டதாகவும் | |
| (ஆ) | பல்கலைக்கழகத்தின் முன்னாள் தலைமை பாதுகாப்பு அதிகாரிக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட முதற்கட்ட விசாரணையின் போது குற்றம் சாட்டப்பட்டவரால் எழுப்பப்பட்ட ஆரம்ப ஆட்சேபனைகளுக்கு எந்த ஒரு கவனமும் முன்னெதிர்வுகூறலும் இல்லாமல் அவரின் சேவை முடிவுறுத்தப்பட்டிருந்தது. இதன் விளைவாக, உச்ச நீதிமன்றத் தீர்ப்பின் மூலம் மீண்டும் பணியில் அமர்த்தப்பட்ட உத்தியோகத்தருக்கு 2015 நவம்பர் 28 முதல் மீளாய்வாண்டு திசெம்பர் 31 வரையிலான காலப்பகுதிக்கு நிலுவை சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 5,569,573 செலுத்த நேர்ந்தது. | நீதிமன்றக் கட்டளை மூலம் இவருக்கு விநியோகிக்கப்பட்டிருந்த சேவையை முடிவுறுத்தும் கடிதம் செல்லுபடியற்றதாகவும் இல்லாமல் ஆக்கப்பட்ட கட்டளை சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெற்றுக் கொள்வதற்காக அனுப்பி வைக்கப்பட்டதாகவும் கௌரவ உயர் நீதிமன்றத்தின் கட்டளை மற்றும் சட்டமா அதிபர் திணைக்களத்தின் அறிவுறுத்தல்கள் கருத்திற் கொண்டு 2021 திசெம்பர் 24 ஆந் திகதி நடைபெற்ற பேரவையால் பிரதான பாதுகாப்பு உத்தியோகத்தரை மீண்டும் சேவையில் ஈடுபடுத்துவதற்கும் அதன் பிரகாரம் அவரின் நிலுவைச் சம்பளத்தை கொடுப்பனவு செய்வதற்கு பரிந்துரைத்ததன் பேரில் இத்தொகை பின்னர் அவருக்கு கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளதாக | ஆரம்ப பரிசோதனையின் போது எதிர்த்தரப்பினரால் முன்வைக்கப்பட்டிருந்த ஆரம்ப எதிர்ப்பிற்காக எந்தவொரு கவனம் செலுத்தாமலும் முன்னெதிர்வு இன்றியும் சேவை முடிவுறுத்திய பொறுப்பான உத்தியோகத்தருக்கு எதிராக இத்தொகை மிகை அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | முகாமையால் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் நிர்வாக விதிகளின்படி சரியான முடிவுகள் மற்றும் தீர்மானங்களை எடுக்காததால், 2010 - 2018 காலகட்டத்தில் பல்கலைக்கழகத்திற்கு எதிராக தீர்ப்பளிக்கப்பட்ட 33 வழக்குகள் தொடர்பில் ரூபா 2,224,800 சட்டக் கட்டணமாகவும் மற்றும் 04 வழக்குகள் தொடர்பாக ரூபா 1,170,895 ஆன இழப்பீட்டையும் கொடுப்பனவு செய்ய | அந்தந்த வழக்குகளுக்குரிய வழக்குத் தீர்ப்புக்களின் பிரகாரம் பேரவையின் பரிந்துரையின் பேரிலும் குறித்த அங்கீகாரத்தைத பெற்றுக்கொண்டதன் பின்னரும் இழப்பீடு செலுத்தப்பட்டுள்ளதாக | முகாமையால் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் நிர்வாக விதிகளின்படி சரியான முடிவுகள் மற்றும் தீர்மானங்களை எடுப்பதன் ஊடாக வழக்குகள் தொடர்பபடுவதை குறைத்துக்கொள்ளல் வேண்டும். |

வேண்டியேற்பட்டது.

### 3.4 நிதியங்களின் குறைப்பயன்பாடு

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஆராய்ச்சி செயற்பாடுகளை மேம்படுத்தும் நோக்கில் 2018 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்த வங்கிக் கணக்கில் ரூபா 12,932,112 ஆன ஆராய்ச்சி மானியங்கள் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரை 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக விளைவற்றுக் காணப்பட்ட மேலும் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ஆராய்ச்சி மானிய வங்கிக் கணக்கொன்றில் காணப்பட்ட ரூபா 5,949,271 தொகை தொடர்பாக எந்தவொரு தகவலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | அபிவிருத்தி நிதியைப் பயன்படுத்துவதற்கான வழிகாட்டல்கள் 2020 ஆகஸ்ட் 13 ஆந் திகதி அன்று நடைபெற்ற நிதிக் குழுக் கூட்டத்திலும், 2020 ஒக்டோபர் 24 ஆந் திகதி நடைபெற்ற பேரவைக் கூட்டத்திலும் அங்கீகரிக்கப்பட்டதாகவும் எதிர்காலத்தில், இந்த நிதியானது தொடர்புடைய அங்கீகரிக்கப்பட்ட செயற்பாடுகளுக்காக பயன்படுத்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்படுமென | நிதியங்களை உயர்ந்த செயற்திறனான வகையில் பயன்படுத்தப்பட வேண்டியதுடன் கணக்காய்விற்காக தேவையான தகவல்கள் வழங்கப்பட வேண்டும். |
| (ஆ) | பல்கலைக்கழகத்தின் ஏனைய ஆராய்ச்சி நிதியத்தின் கீழான 15 நிதியங்களுக்குரிய ரூபா 10,132,868 ஆன ஆராய்ச்சி நிதியமொன்று ஓராண்டிற்கு மேற்பட்ட காலமாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டு முழுவதும் கொவிட் தொற்றுநோய் நிலைமையைக் கருத்தில் கொண்டு, இந்த நிதிகள் மூலம் எதிர்பார்க்கப்பட்ட பணிகளைச் செய்ய இயலவில்லை, மேலும் தற்போது அந்த நிதி எதிர்பார்த்த பணிகளுக்குப் பயன்படுத்தப்படுகிறது. | நிதியங்களை உயர்ந்த செயற்திறனான வகையிலும் ஆக்கபூர்வமாகவும் பயன்படுத்தப்பட வேண்டும். |
| (இ) | 08 வெவ்வேறு ஆராய்ச்சி நிதியங்களுக்காக கிடைக்கப்பெற்றிருந்த ரூபா 7,304,324 தொகை மீளாய்வாண்டின் இறுதி வரை ஓராண்டிற்கு மேற்பட்ட காலமாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இரத்துச் செய்யப்பட்ட ஆராய்ச்சிகளுக்காக வழங்கப்பட்டுள்ள பணத்தை அறவிட்டுக் கொள்வதாக | நிர்ணயிக்கப்பட்ட காலரப்பகுதியில் அனைத்து ஆராய்ச்சிகளையும் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.5 பயனற்ற செலவினங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பல்கலைக்கழகத்தினால் ரூபா 5,325,800 செலவழித்து 2015 ஆம் ஆண்டின் போது சீனாவில் உள்ள Tianjin maritime College இல் 06 உத்தியோகத்தர்களுக்கு மென்பொருள் அமைப்பு பயிற்சியை வழங்கியது. இந்தப் பயிற்சியைப் பெற்ற 02 உத்தியோகத்தர்கள் கணினி மென்பொருள் ஒழுங்குபடுத்தல் மற்றும் மதிப்பீட்டுக் குழுவிற்கு நியமிக்கப்பட்டிருந்த போதும், எஞ்சிய 04 உத்தியோகத்தர்களிடமிருந்தும் இத்திட்டத்திற்கு எந்தவொரு பங்களிப்பையும் பெற்றுக் கொள்ளப்படவில்லை. | இந்த 04 உத்தியோகத்ததர்களில் மூன்று உத்தியோகத்தர்கள் பல்கலைக்கழக சேவையிலிருந்து விலகியமை மற்றும் மற்றைய ஊழியர் 2021 சனவரி முதல் பல்கலைக்கழக சேவையிலிருந்து தற்காலிகமாக விலகியமை காரணமாக அவர்களிடமிருந்து பங்களிப்பினை பெற்றுக் கொள்ள முடியாமல் போனதாக | மனித வளங்களிலிருந்து உயர்ந்த பயன்களைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். |
| (ஆ) | 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரை வேலை கைவிடப்பட்டிருந்த 20 செயற்திட்டங்களுக்காக 2003 ஆம் ஆண்டிலிருந்து 2017 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதயில் செலவிடப்பட்டிருந்த ரூபா 27,297,463 ஆன மீண்டெழும் செயற்திட்ட செலவினம் மற்றும் 2009 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் செலவிடப்பட்டிருந்த ரூபா 77,692,338 ஆன மூலதன செயற்திட்ட செலவினம் என்பன பயனற்ற செலவினமாக இருந்தன. | 12 மீண்டெழும் செயற் திட்டங்களுக்குரிய செலவிடப்பட்ட ரூபா 27,297,463 மற்றும் 08 மூலதனச் செயற் திட்டங்களுக்குரிய ரூபா 77,692,338 ஆன வேலை பொறியியலாளரால் உறுதிப்படுத்தப்படாமையால் மூலமனமாக்க முடியாமல் இருந்ததாக | நிதியங்களை உயர்ந்த செயற்திறனான வகையில் பயன்படுத்த வேண்டியதுடன் வேலைகளை கைவிட்டமைக்கு காரணங்கள் பரீட்சிக்கப்பட்டு பொருத்தமான நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

## 3.6 ஒப்பந்த நிர்வாகத்திலான குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அருணாச்சலம் விடுதியின் திருத்த வேலைகளுக்காக 2018 சனவரி 08 ஆந் திகதி ரூபா 45.8 மில்லியன் பெறுமதிக்கு ஒப்பந்தக்காரருடன் உடன்படிக்கை செய்யப்பட்டதன் பின்னர் 2019 யூலை மாதம் வேலை ஆரம்பிப்பு முற்பணமாக ரூபா 7,102,351 தொகை செலுத்தப்பட்டிருந்தது. 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரை 2 ½ ஆண்டுகள் காலம் கடந்திருந்த | இதுவரை வேலை ஆரம்பிக்கப்படாத இச்செயற்திட்டத்திற்காக கொடுப்பனவு செய்யப்பட்டுள்ள முற்பணத் தொகை தொடர்பாக தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக | ஒப்பந்த மீறல் தொடர்பாகவும் முற்பணத்தை அறவிடுவது தொடர்பாகவும் முறையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | போதும் அதன் வேலை ஆரம்பிக்கப்பட்டிருக்க வில்லை. | | |
| (ஆ) | விஜேவர்தன விடுதியின் புதுப்பித்தல் செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட வேண்டிய 2020 மார்ச் 17 ஆந் திகதி முதல் 2021 திசெம்பர் 07 ஆந் திகதி வரை 02 சந்தர்ப்பங்களில் 20 மாதங்கள் வரை ஒப்பந்தகாலம் நீடிக்கப்பட்டிருந்த போதும் பௌதீக முன்னேற்றம் 65 சதவீதம் மாத்திரமாக இருந்தது | இறுதியாண்டின் கல்வி செயற்பாடுகளுக்காக விடுதிகள் வழங்கப்படுவதால் விடுதிகளை ஒரே தடவையில் வெறுமையாக்கி ஒப்பந்தக்காரருக்கு வழங்க முடியாமல் இருந்ததாகவும் கொவிட் தொற்று நிலைமை, சுகாதார வழிகாட்டல்கள் மற்றும் பயணக் கட்டுப்பாடு காரணமாக புனரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வது தாமதமானதாகவும் 2021 திசெம்பர் 08 ஆந் திகதி முதல் 2022 ஒக்தோபர் 12 ஆந் திகதி வரை ஒப்பந்தக்காலத்தை நீடிப்பதற்கு செயற்திட்ட முகாமையாளர் தற்போது பரிந்துரைத்துள்ளதால் 2022 யூன் மாதம் நடைபெறும் பேரவைக்கு சமர்ப்பித்து கல்வி அமைச்சின் செயலாளரின் அங்கீகாரத்திற்காக அனுப்புவதற்கு உள்ளதாக | உடன்படிக்கை செய்யப்பட்ட காலப்பகுதியில் நிர்மாண வேலைகளைப் பூர்த்தி செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | கலை பீடத்தின் புவியியல் துறையில் தற்போது நிர்மாணிக்கப்பட்டு வரும் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கு முன்னர் 2020 மார்ச் மாதத்தின் போது ரூபா 4,275,000 செலவிட்டு நிர்மாணிக்கப்பட்ட கொங்கிரீட் பக்க சுவர் மழை காரணமாக முழுவதும் கட்டிடத்தின் சுவருக்கு மேல் உடைத்து விழுந்திருந்த போதும் மீளாய்வாண்டின் இறுதி வரையில் சுற்று மதிலை மீண்டும் நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போது உடைத்து விழுந்திருந்த மதிலை அகற்றும் வேலைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளதாகவும் மீண்டும் திட்டமிட்டு நிர்மாண வேலைகள் ஒப்பந்தக்காரரால் மேற்கொள்வதாகவும் பொறியியல் பீடத்தின் முகவரினதும் செயற்திட்ட அலுவலகத்தின் முழுமையான மேற்பார்வையின் கீழ் அடுத்துவரும் நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாகவும் | 2020 மார்ச் மாதத்தின் போது நிர்மாணிக்கப்பட்ட கொங்கிரீட் பக்க சுவர் உடைந்து விழுவதற்கான காரணங்களை கண்டறிந்து எதிர்வரும் நடவடிக்கைனகள் எடுக்கப்பட வேண்டியதுடன் புதிய நிர்மாணங்கள் உரிய நியமங்களுக்கு இணங்க நிர்மாணம் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஈ) | பல்கலைக்கழக கூடம் 01 மற்றும் பல்கலைக்கழக கூடம் 02 விடுதி திருத்த ஒப்பந்தம் ரூபா 1,853,984 வீதத்தில் ஒப்பந்த பெறுமதியுடன் ஒப்பந்தக்காரருடன் உடன்படிக்கை மேற்கொள்ளப் பட்டிருந்ததுடன் 2019 யூலை 26 ஆந் திகதி வரை 02 ஒப்பந்தங்களும் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தன. 02 ஒப்பந்தங்களுக்காக 2022 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரை ரூபா | விடுதியின் சுவர்கள் மற்றும் மாணவர்களின் கற்றல் மேசைகளை மூடும் வகையில் மின் விளக்குகள் பொருத்தப்பட வேண்டியிருந்த போதும் விடுதிக்கு மரப்பொருட்கள் வழங்குவதில் தாமதம் ஏற்பட்டதால், ஒப்பந்தப் பணியை முடிக்க முடியாமல் போனதாகவும் தற்போதும் அதே நிலை இருப்பதாகவும் | உடன்படிக்கை செய்யப்பட்ட காலப்பகுதியில் நிர்மாண வேலைகளைப் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 1,254,028 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் உடன் படிக்கை செய்யப்பட்ட காலம் 03 ஆண்டுகளுக்கு அண்மித்த காலம் கடந்திருந்த போதும் பௌதீக முன்னேற்றம் 33 சதவீதமாகவும் 30 சதவீதமாகவும் இருந்தன. | இந்த செயற்திட்டத்தை தற்காலிகமாக நிறுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளதாக. | |
| (உ) | இராமநாதன் மண்டபத்தில் படிக்கற்கள் நிர்மாண ஒப்பந்தம் ரூபா 2,083,940 தொகையான ஒப்பந்த பெறுமதிக்கு ஒப்பந்தக்காரருடன் உடன்படிக்கை மேற்கொள்ளப் பட்டிருந்ததுடன் மூன்று சந்தர்ப்பங்களில் மேற்கொள்ளப்பட்ட கால நீடிப்புடன் 2020 யூன் 04 ஆந் திகதி அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டி இருந்தது. எனினும் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரை பௌதீக முன்னேற்றம் 80 சதவீதமாக இருந்தது. | அளவீட்டுப் பத்திரத்தின் பிரகாரம் உரிய மூலப்பொருட்கள் இல்லாமை மற்றும் மூலப்பொருள் விலை அதிகளவில் அதிகரித்தமை காரணமாக செயற்பாடுகளை பூர்த்தி செய்வதற்கு தாதமதமாகியதாகவும் 2022 யூன் 30 ஆந் திகதி அளவில் வடிகாண் இட்டு எஞ்சிய வேலைகளை பூர்த்தி செய்து தருவதற்கு இணங்கியுள்ளதாக | உடன்படிக்கை செய்யப்பட்ட காலப்பகுதியில் நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். |
| (ஊ) | விஜேவர்தன விடுதியின் திருத்த வேலைகளுக்காக ரூபா 177,799,018 பெறுமதியான ஒப்பந்தமொன்று 2018 ஏப்ரல் மாதத்தின் போது ஒப்பந்தக்காரருடன் உடன்படிக்கை செய்து வேலை ஆரம்பிப்பு முற்பணமாக ரூபா 40,017,474 தொகை ஒப்பந்தக்காரருக்கு செலுத்தியிருந்த போதிலும் வேலை தொடக்க முற்பணம் செலுத்தி 09 மாதங்களுக்குப் பின்னர் 2019 பெப்ரவரி 08 ஆந் திகதியே வேலைத்தளம், கையளிக்கப்பட்டிருந்தது. | கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை | வேலைத்தளத்தை ஒப்பந்தக்காரருக்கு கையளிப்பதற்கு முன்னர் ஆரம்பிப்பு முற்பணம் வழங்கக் கூடாது அத்துடன் அரசின் பணத்தை முறையற்ற பாவனைக்கு உட்படுத்தியதுடன் தொடர்புடையவர்களுக்கு பொருத்தமான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (எ) | பல்கலைக்கழக கலை பீடத்தித்தின் ஏழு மாடிகளுடன் கூடிய கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்காக ரூபா 397,329,388 ஆன உடன்படிக்கை யொன்று மேற்கொள்ளப்பட்டிருந்த துடன் கட்டிடத்தின் ஒரு மாடியின் உயரம் 14 அடி என்ற வகையில் நிர்மாணிக்க அமைச்சரவை தீர்மானத்திற்கு இணங்காத வகையில் ஒரு மாடியின் உயரம் 12 அடி வரை 02 அடி வீதம் 06 மாடிகளின் உயரம் 12 அடிகள் குறைத்து கட்டிடம் நிர்மாணிக்கப் பட்டிருந்ததுடன் அதற்காக அமைச்சரவை அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்க வில்லை. | - மேற்படி - | அமைச்சரவை அங்கீகாரம் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஏ) | ரூபா 36,229,143 ஆன கலை பீடத்தின் 04 மின்துாக்கிகளை பொருத்தும் ஒப்பந்தத்தின் கிரய மதிப்பீடு தயாரித்தல், பரிந்துரைத்தல், உறுதிப் படுத்தல், தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் உறுப்பினராக செயற்படல் மற்றும் பட்டியல் பரீட்சித்தல் போன்ற அனைத்து சந்தர்ப்பங்களுக்காக வேலைப் பொறியியலாளர் தொடர்புபட்டிருந்தமை காரணமாக பெறுகை செயற்பாடு வெளிப்படைத்தன்மை மற்றும் சுயாதீனம் தொடர்பில் தாக்கமளிக்க கூடியதாக காணப்பட்டது. | தற்போது வேலை பொறியியலாளரால் மதிப்பீடு தயரித்தல் திருத்த வேலைகள் அல்லது ஏனைய செயற் திட்டங்களுக்கு தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் உறுப்பினராக அப்பொறியயிலாளரை நியமனம் செய்யாமல் இருக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக | அரசு பெறுகை வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஐ) | பல்கலைக்கழகத்தின் கணக்கீட்டு செயற்பாடுகள் மற்றும் ஊழியர் சம்பள கொடுப்பனவிற்கு கணனி மென்பொருள் முறைமையொன்றை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 7,514,311 ஆன ஒப்பந்த பெறுமதியில் தனியார் நிறுவனமொன்றுடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. முற்பணமாக ரூபா 2,644,286 தொகையும் முதலாவது இடைக் கொடுப்பனவாக ரூபா 3,311,876 தொகையும் வருடாந்த அனுமதிப்பத்திரத்தை புதுப்பிப்பதற்காக ரூபா 2,393,934 தொகையுமாக மொத்தம் ரூபா 8,350,096 ஒப்பந்தக்காரருக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. 05 சந்தர்ப்பங்களின் போது 27 மாத காலப்பகுதிக்காக செயற்திட்ட காலம் நீடிக்கப்பட்டிருந்ததுடன் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அக்காலப்பகுதியை மிகைத்து 06 மாதங்கள் கடந்திருந்த போதும் செயற்பாட்டை பூர்த்தி செய்வதற்கு தவறியிருந்தது. மேலும் உடன்படிக்கை நிபந்தனைகளின் பிரகாரம் முறைமை ஸ்தாபிக்கப்பட்டு 03 மாதங்களுக்கு பின்னர் மற்றும் சேவை உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் மாத்திரம் அனுமதிப்பத்திர கட்டணங்கள் மற்றும் அனுமதிப்பத்திர புதுப்பித்தல் | இச்செயற்திட்டம் 2022 ஆம் ஆண்டில் மீண்டும் மீளமைக்கப்பட்டு நிறுவுவதற்கு குறித்த சேவை வழங்கும் நிறுவனத்துடன் தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் 2022 யூன் மாதம் முதல் பரிசோதனை மட்டத்தில் இம்மென்பொருள் முறைமையை நிறுவுவதற்கு சேவை வழங்கும் நிறுவனத்துடன் இணங்கியுள்ளதாகவும் உடன்படிக்கையின் பிரகாரம் SAT Software License பல்கலைக்கழகத்தினுள் நிறுவி மூன்று மாத காலப்பகுதிக்குள் முதலாம் ஆண்டின் அனுமதிப்பத்திரங்களைப் புதுப்பிக்கும் கட்டணங்களுக்குரிய கம்பனிக்கு செலுத்த வேண்டியதால் ரூபா 729,788 தொகை 2020 ஆகஸ்ட் 13 ஆந் திகதி குறித்த கம்பனிக்கு கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக | உடன்படிக்கை செய்யப்பட்ட காலப்பகுதியில் வேலைகளைப் பூர்த்தி செய்து கொள்ள வேண்டியதுடன் உடன்படிக்கை நிபந்தனைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

கட்டணங்கள் செலுத்த வேண்டிய போதிலும் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரை செயற்பாடு பூர்த்தி செய்யப்படாதிருந்த வழங்குனருக்கு 2019, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளுக்குரிய அனுமதிப்பத்திரக் கட்டங்கள் மற்றும் அனுமதிப்பத்திர புதுப்பித்தல் கட்டணங்களாக முறையே ரூபா 729,788 தொகை ரூபா 806,307 மற்றும் ரூபா 857,838 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.